மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

முன்னிலை: இ. தெய்வீகன், பி. ஏ. எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை

இடைநிலை மனுஎண்.6/2025

இன்

அசல் வழக்கு எண்.616/2019

1. காதர்பாட்ஷா (இறந்தார்)
2. ரஹிமா பீ
3. ஜெய்புன்னிசா
4. சிராஜீனிசா
5. தாஜுல் ஹீதா ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முகமது கனி
2. பதுருதீன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 10.12.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. இராதாகிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்புகளை, நில அளவையர் உதவியுடன் அளந்து பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க உத்தரவாக வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26, விதி 9-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 3 ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரர்கள் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகைக்காகவும், அதனை தொடர்ந்து சுவாதீனத்திற்காகவும் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தும் பிற சொத்துக்களும் ஆதியில் மனுதாரரின் தந்தையின் உலாமொய்தீனுக்கு

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:07 +0530

சொந்தமாயிருந்து அதில் புல எண்.44/1ல் ஏக்கர் 1.02ல் 24 சென்ட் நிலத்தை மனுதாரரரின் தந்தையான 1–ம் வாதிக்கு அவரது தாத்தா கடந்த 15.06.1966 வருடம் பதிவு செட்டில்மெண்ட் செய்தும் அதே தேதியில் அந்த நம்பரில் 78 சென்ட் நிலத்தை அவரது பெரியப்பா முகம்மது முஸ்தபாவிற்கு பதிவு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றும், பின்னிட்டு கடந்த 13.05.1986–ல் அவரது பெரியப்பா 78 சென்ட் நிலத்தை பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், பிரதிவாதிகள் சட்டவிரோதமாக தங்களை 28 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளனர் என்றும், மனுதாரரின் தந்தை ஆட்சேபித்தும் அவர்கள் அதில் கட்டிடம் கட்டி விட்டனர் என்றும், அதனால் மனுதாரரின் தந்தை கடந்த 09.12.2015–ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு ஓர் வக்கில் நோட்டீஸ் கொடுத்தும் அதை பெற்றும் பிரதிவாதிகள் பதிலளிக்காமல் 10.04.2016–ல் ஒரு கேவியேட் மனு தாக்கல் செய்துள்ளனர் என்றும், பிரதிவாதிகள் ஆக்கிரமித்த நிலத்தையும் தன் தாத்தாவிடமிருந்து தன் தந்தையும் தன் பெரியப்பாவும் செட்டில்மெண்ட் பெற்ற நிலத்தையும் சர்வேயர் உதவியுடன் ஆணையர் மூலம் அளந்து அதில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பையும் தங்களுக்கு பாத்தியப்பட்ட 24 சென்ட் நிலத்தையும் தன் பெரியப்பா பிரதிவாதிகளுக்கு கொடுத்த 68 சென்ட் நிலத்தையும் பூஸ்துதியில் அடையாளம் காண இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது என்றும், வழக்குச்சொத்தை சர்வேயர் மூலம் அளந்து பார்த்து ஆக்கிரமிப்புகளை அடையாளம் காணாமல் வழக்கு நடத்தினால் தங்களுக்குப் பெருத்த கஷ்டமேற்படும் என்றும், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடியான ஆணையர் மனுவின் பெயரில் தாங்கள் பொருளாதார சுமை காரணமாக அப்பீல் செய்யவில்லை என்றும், வழக்கு சொத்தை தங்களிடம் சுவாதீனம் கொடுக்காமல் இருந்து வந்ததினால் தாங்கள் நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து ஆணையர் மற்றும் நில அளவையர் உதவியுடன் வழக்குறு சொத்தின் இயற்கை அமைப்பையும், பூஸ்துதியும் பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர், தனது மனுவில் பொய்யான காரணத்தை கூறி மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் இந்த வழக்கை 2016 ஆம் ஆண்டில் பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்தனர் என்றும், இந்நிலையில், வழக்கு

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:21 +0530

மனுதாரர்களின் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டபோது, அவர்களுடைய சாட்சியங்களை பதிவு செய்யாமல், வழக்கை முடிவில்லாத வகையில் இழுத்தடித்து எதிர்மனுதாரர்களை தொந்தரவு செய்யும் நோக்கத்துடன், I.A.No.03/2023 என்ற எண்ணில் ஆணையர் நியமன மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், பின்னர், 14.08.2023 அன்று இந்த மாண்புமிகு நீதிமன்றம் I.A.No.03/2023 இல் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய ஆணையர் மனுவை நீதியுடனும் சட்டப்பூர்வமாகவும் தள்ளுபடி செய்தது என்றும், அதன் பின்னர் இரு தரப்பினரின் சாட்சியங்களும் முடிவடைந்து, வழக்கு வாதங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது என்றும், இந்நிலையில், வழக்குச் சொத்துகளை சர்வேயரின் உதவியுடன் ஆய்வு செய்ய மீண்டும் இந்த ஆணையர் நியமன மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கும் இயற்கை நீதிக்கும் எதிரானது என்றும், உண்மையில் மனுதாரர்களுக்கு வழக்குச் சொத்துகளை அளவிட வேண்டும் என்ற நோக்கம் இருந்திருந்தால், அவர்கள் I.A.No.03/2023 இல் வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சிவில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், மேலும், இவ்வழக்கில் பிரதானமாக உள்ள விவகாரம் வழக்குச் சொத்துகளின் கைப்பற்றல் (possession) குறித்ததாகும் என்றும், கைப்பற்றல் தொடர்பான விஷயங்களில், சாட்சிகளை நீதிமன்றமே தரப்பினரிடமிருந்து பெற வேண்டுமே தவிர, அவற்றை ஆணையரிடம் ஒப்படைக்க முடியாது என்றும், மனுதாரர்கள் தங்கள் கூற்றுக்கு ஏற்ப ஆதாரங்களை உருவாக்கவும் சேகரிக்கவும், இந்த நீதிமன்றத்தின் செயல்முறைகளை தவறாக பயன்படுத்தி இந்த அற்பமான மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்களின் வழக்கு உண்மையும் நேர்மையும் கொண்டதாக இருந்தால், அவர்கள் தங்களுடைய சொந்த ஆவண ஆதாரங்களின் மூலம் அதனை நிரூபிக்க வேண்டும் என்றும், மேலும், வழக்கின் தன்மையும் தீர்மானிக்க வேண்டிய அம்சங்களும் ஆணையர் நியமனத்தை எந்த வகையிலும் அவசியப்படுத்தவில்லை என்றும், ஆகவே, இந்த மனு ஏற்றுக்கொள்ள முடியாததும், சட்டப்படி நிலைக்க முடியாததும் ஆக இருப்பதால், தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

DEIVEEGAN E

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:26 +0530

<u>தீர்வு</u>

6) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் 3ம் வாதி என்றும், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகைக்காகவும், அதனை தொடர்ந்து நிரந்தர தடையுறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் பூஸ்துதியை அறிய ஏற்கனவே IA No. 3/2023 மனு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும், பின்னிட்டு இம்மனு தாவா சொத்தின் பூஸ்துதியை அறிய இரண்டாவது முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுவில் கோரியுள்ள நீதிமன்ற ஆணையரை நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தின் பூஸ்துதியை அறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்பதை ஆராய்கையில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் தங்களது நிலமான வழக்கு சொத்தில் 28 செண்ட் நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளனர் என்ற வாதம் வைக்கப்பட்டது. அந்த வாதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்தால் மட்டுமே உண்மை நிலவரம் தெரியவரும் என்பதாலும், அது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும், வழக்கு ஆவணங்களில் உள்ள சங்கதிகளை தெளிவுபடுத்தும் பொருட்டு ஆணையரை நியமிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதியும் வழக்கின் உண்மை தன்மையை குறித்து அறிய நீதிமன்ற ஆணையரை நியமித்து சர்வேயர் உதவியுடன் வழக்கு சொத்தை அளந்து ஓர் அறிக்கையும் வரைபடத்தையும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

i) மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்ற ஆணையருக்கான பயணப்படி மற்றும் இதர செலவுத் தொகையாக ரூ.8000/- செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகையில் ரூ.3000/-த்தை நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்தி அதற்குரிய ஒப்புகை சீட்டுபெற்றும் மீதம் ரூ.5000/-த்தை இந்த நீதிமன்றத்தில் வைப்பீடாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

ii) இம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மனுவில் கண்டுள்ள வழக்கு சொத்தை நில அளவையர் உதவியுடன் அளந்து வழக்கு சொத்துகளின் அளவு மற்றும் இயற்கை அமைப்பு குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தயாரிப்பது தொடர்பான

DEIVEEGAN E

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:32 +0530

வேலைகளுக்காக வழக்கறிஞர் **திரு. R. நாயகன்** ஆணையராக நியமித்து உத்தரவிடப்படுகிறது.

iii) நீதிமன்ற ஆணையர் ரூ.3000/–த்தை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டு அதற்குரிய ஒப்புகைச் சீட்டு அளித்தும் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் வாரன்டை பெற்று அதன்பேரில் நில அளவையர் மற்றும் வழக்கு தரப்பினருக்கு அறிவிப்பு அனுப்பி அதன் பேரில் குறிப்பிட்ட நாளில் வழக்கு சொத்தை நில அளவையர் உதவியுடன் அளந்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்த நீதிமன்றத்தில் 2 மாத காலத்திற்குள் தாக்கல் செய்து மீதத்தொகை ரூ.5000/–பெற்றுக் கொள்ள இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI
Date: 2025.12.10 12:21:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.